සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## கத்தோலிக்க சமயம் - කතෝලික ධර්මය

தரம் : **6** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி I**

♦ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

• **1 - 10 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. திருவிவிலியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயமாவது எது?
   1) இறைவார்த்தை 2) பத்துகட்டளைகள்
   3) உலகப்படைப்பு 4) விடுதலைப்பயண நிகழ்வு

2. திருவிவிலியத்தில் புதிய ஏற்பாட்டில் உள்ள நூல்களில் ஒன்று.
   1)விடுதலைப்பயணம் 2) திருப்பாடல்கள் 3) எசாயா 4) திருவெளிப்பாடு

3. விடுதலைப்பயண நூலில் முக்கிய இடத்தினை வகிக்கும் நபர் யார்?
   1) ஈசாக் 2) மோசே 3) ஆபிரகாம் 4) யாக்கோபு

4. புதிய ஏற்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள நூல்களில் முதல் நான்கு நூல்களும் எப்பெயரால் அழைக்கப்படுகிறது.
   1) பஞ்சாகமம் 2) இறைவாக்கினர் நூல் 3) நற்செய்தி நூல் 4) சட்ட நூல்

5. இறைவனின் பிள்ளை என்ற அழியாத முத்திரையை ஆன்மாவில் பதியச் செய்கின்ற அருளடையாளமாவது
   1) திருமுழுக்கு 2) குருத்துவம் 3) திவ்விய நற்கருணை 4) நோயிற் பூசுதல்

6. பத்துக்கட்டளைகளில் ஐந்தாவது கட்டளை எது?
   1) பிறர் தாரத்தை விரும்பாதே 2) தந்தை - தாய் பேணுதல்
   3) கொலை செய்யாதிருத்தல் 4) பொய் சொல்லாதே

7. "பாஸ்கா மறைபொருள்" என்பது
   1) கிறிஸ்துவின் பாடுகள், மரணம் - உயிர்ப்பு என்பதாகும்.
   2) கிறிஸ்துவின் பிறப்பு, மரணம், உயிர்ப்பு என்பதாகும்.
   3) கிறிஸ்துவின் பிறப்பு, பாதம் கழுவுதல, மரணம் என்பதாகும்.
   4) கிறிஸ்துவின் பாடுகள், மரணம், விண்ணேற்பு என்பதாகும்.

8. "தூரா" என்னும் இடத்தில் பொற்சிலை செய்து அதனை மக்கள் வழிபட வேண்டும் என ஆணை பிறப்பித்த மன்னன் யார்?
   1) பார்வோன் மன்னன் 2) சவுல் அரசன் 3) தாவீது அரசன் 4) நெபுகத்னேசர் அரசன்

9. திவ்விய நற்கருணை ஏற்படுத்தப்பட்ட நாள் எது?
   1) குருத்தோலை ஞாயிறு 2) பெரிய வியாழன் 3) பெரிய வெள்ளி 4) விபூதிப் புதன்

10. இயேசு வருடம்தோறும் தம் பெற்றோருடன் எருசலேயம் தேவாலயம் சென்றமைக்கான காரனம் எது?
    1) பாஸ்கு விழா கொண்டாடுவதற்கு    2) தூய்மைச் சடங்கு நிறைவேற்றுவதற்கு
    3) பலி ஒப்புக்கொடுப்பதற்கு    4) விருத்தசேதன சடங்கை நினைவு கூறுவதற்கு

- **பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

| கடன் திருநாளும், அகுஸ்து சீசர், புனித லூக்கா, 46, கழுகு, 27 |
|---|

11. திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிக்கை ................ ஆகும்.

12. ..................... வைத்தியரும் வரலாற்று ஆசிரியரும் ஓவியக் கலைஞருமான இவர் நற்செய்தி ஆசிரியருமாவார்

13. ஞாயிறு தினம் .................. புனித நாளுமாகும்.

14. பேரரசு முழுவதும் மக்கள் தொகையை கணக்கெடுக்குமாறு ................... கட்டளை பிறப்பித்தான்.

15. புனித யோவான் நற்செய்தியின் அடையாளம் ................... ஆகும்.

- **பின்வருவன சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

16. பிள்ளை பருவத்திலே இயேசு வளர்ச்சி பெற்ற விதம் பற்றி புனித லூக்கா குறிப்பிடுகின்றார். (   )

17. குருத்துவம் குணமளிக்கும் அருளடையாளமாகும். (   )

18. புகுமுக அருளடையாளங்கள் நிறைவடைவது தேவநற்கருணையிலாகும். (   )

19. வேறுமத கடவுளை ஆராதிப்பது முதலாம் கட்டளைக்கு எதிரான பாவமாகும். (   )

20. வேண்டிய நேரத்தில் எல்லாம் கடவுளின் பெயரால் ஆணையிட்டு சத்தியம் செய்ய முடியும். (   )

$2 \times 20 = 40$ புள்ளி

## பகுதி II

♦ **முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.**

1. 1) நற்செய்தி நூல்கள் இரண்டை குறிப்பிடுக?
   2) இறைவன் மூன்றாம்நாள் படைத்த படைப்புக்களில் இரண்டை எழுதுக?
   3) புகுமுகு அருளடையாளங்களில் இரண்டு குறிப்பிடுக?
   4) இலங்கையில் கத்தோலிக்கர் கடைப்பிடிக்கும் கடன் திருநாட்கள் இரண்டு எழுதுக?
   5) பணிவாழ்வின் அருளடையாளங்கள் இரண்டு குறிப்பிடுக?
   6) இயேசு வளர்ச்சி பெற்ற இருதுறைகளை எழுதுக?
   7) ஆதிப்பெற்றார் குடியிருந்த தோட்டத்தின் பெயர் என்ன ?
   8) நாம் பாதுகாக்க வேண்டிய இரண்டு இறை படைப்புக்களை குறிப்பிடுக?
   9) குருக்களின் பணிகள் இரண்டு எழுதுக?
   10) நீர் ஒரு சிறிய மறைபரப்பாளன் என்ற வகையில் உம்மால் செய்யக்கூடிய இரண்டு செயல்களை எழுதுக?

(2 × 10 = 20 புள்ளி)

2. 1) மனிதன் மற்ற எல்லாப் படைப்புக்களை விடவும் உயர்ந்தவனாக காணப்படக் காரணம் இரண்டு எழுதுக?
   2) இறைவன் மனிதனிடம் ஒப்படைத்த கடமைகள் பொறுப்புக்களில் மூன்றைக் குறிப்பிடுக?
   3) இறைபடைப்பை பாதுகாக்கக் கூடிய 5 வழி முறைகளை எழுதுக?

(2+3+5=10 புள்ளி)

3. 1) அருளடையாளத்தின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?
   2) ஒரு முறை மாத்திரம் பெறக்கூடிய அருளடையாளம் மூன்று தருக?
   3) திருமுழுக்கினால் கிடைக்கும் அருள்கள் 5 எழுதுக?

(2+3+5=10 புள்ளி)

4. 1) ஞாயிறு தினத்தில் நாம் நினைவு கூறும் நிகழ்வு யாது?
   2) பத்துக்கட்டளைகளில் அயலாரை அன்புசெய்யக் கற்பிக்கும் மூன்று கட்டளைகளை எழுதுக?
   3) ஞாயிறு தினத்தை தூயதாக கடைப்பிடிக்க நீர் மேற்கொள்ளக்கூடிய 5 நடவடிக்கைகளைக் குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளி)

5. 1) ஆதிப்பெற்றோர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
   2) ஐந்நூலை குறிப்பிடும் வேறுபெயர்கள் மூன்று எழுதுக?
   3) தொடக்க நூலில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் 5 தருக?

(2+3+5=10 புள்ளி)

6. 1) இயேசுவின் பிறப்பை முன்னறிவித்த இறைவாக்கினர் யார்?
   2) யூத இனத்தவரின் மத, இன சம்பிரதாய சடங்குகள் மூன்று எழுதுக?
   3) இறை பிள்ளைகளான எமக்கு கிடைத்துள்ள ஆற்றல்கள், திறமைகளுக்கு நன்றி கூறி சிறு செபம் எழுதுக? (செபத்தின் பண்புகள் கானப்படல் வேண்டும்)

(2+3+5=10 புள்ளி)